ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1941/36 - 2015 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2015.11.20

*1941/36 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் புலத்கொஹுபிட்டிய நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் பம்பும் நிலையம் மற்றும் பரிமாற்றக் குழாய் வழிகளை இடுதல் போன்ற நிர்மாண செயற்பாடுகளிற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, நவெம்பர் 04.*
*5/2/1/ 1128.*

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில் புலத்கொஹுபிட்டிய மாவட்ட செயலாளர் பிரிவின், 61 ஏ அலவதுர கிராம அலுவலர் பிரிவில் பிட்டேகமவில் அமைந்துள்ள மொரகஹலந்த ஹேன்யாய எனும் காணியில், சுமார் 6 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இக்காணியின் மிகுதித்துண்டு ; |
| கிழக்கு | : | வியலபிடிய- பிட்டேகம வழி (பிரதேச சபை); |
| தெற்கு | : | உரிமைபெற்ற நில அளவையாளர் எல். சீ. கே. லியனகே அவர்களால் அளவையிடப்பட்ட திட்ட இல. 1130 இலுள்ள துண்டு இல. 05 ; |
| மேற்கு | : | அலவதுர எல மற்றும் இக்காணியின் மிகுதித்துண்டு. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திருமதி ஆர். சுஜாதா வீரசிங்க,
கெந்தவ,
புலத்கொஹுபிட்டிய.

*12- 208*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கலிகமுவ நீர் வழங்கல் கருத்திட்டத்தில் அமைந்த கொப்பேவெல நீர் சேகரிப்புத்தாங்கியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, நவெம்பர் 04.*
*5/2/1/ 1149.*

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கொப்பேவெல கிராம அலுவலர் பிரிவில் கொப்பேவெல கிராமத்தில் அமைந்துள்ள கந்தஹேன எனும் காணியின் மொத்த பிரமாணத்திலிருந்து 30.28 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-*

*வடக்கு : திட்ட இல. 889 துண்டு இல. 6 ;*
*கிழக்கு : இக்காணியின் மிகுதிப் பகுதி ;*
*தெற்கு : சிரிமலா வெதகே உரிமை கொண்டாடும் காணி ;*
*மேற்கு : இக்காணியின் மிகுதிப் பகுதி.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* *திரு. எஸ். எம். நிமல் கருணாதிலக,*
*இல. 569/108, பண்டாரநாயக்க பெதேச,*
*திஹாரிய, கலகெடிஹேன.*

*12- 209*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.